www.tamilarangam.net





# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## மக்கள் முன்னணி

'விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி' என்ற பெயரில் தங்கள் அரசியல் கட்சியை பதிவு செய்தனர் புலிகள். ஆங்கிலத்தில் சுருக்கமாக பி.எஃப்.எல்.ரி. என்று அழைக்கப்பட்டது.

இதனை அறிவிக்குமுகமாக கொழும்பில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை பி.எஃப்.எல்.ரி நடத்தியது.

சிவப்பு வர்ணம்ப் பின்னணியில் புலியொன்றின் தலை கட்சியின் சின்னமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

புலிகள் விரும்பிக் கேட்ட சின்னத்தையே அரசாங்கம் ஒதுக்கிக் கொடுத்தது.

கொழும்பில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், மக்கள் முன்னணி செயலாளர் யோகி ஆகியோர் கலந்து கொண்டனர்.

அங்கு தெரிவிக்கப்பட்ட முக்கிய கருத்துக்கள் இவைதான்:

அரசியல், இராணுவ அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி என்ற பெயரின்கீழ் ஓர் அரசியல் கட்சியாக சிறீலங்கா அரசு அங்கீகரித்துள்ளது.

அதேசமயம் விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவு தொடர்ந்து இயங்கும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற தேசிய விடுதலை இயக்கத்தின் தலைவராகவும், இராணுவப் பிரிவின் தளபதியாகவும் திரு.வேலுப்பிள்ளை பிரபாகரனே தொடர்ந்து இயங்குவார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி என்ற அரசியல் கட்சியின் தலைவராக திரு. மகேந்திரராஜா மாத்தையாவும், செயலாளராக திரு.யோகரத்னம் யோகியும் பணிபுரிவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த அறிவித்தலை கூர்ந்து கவனித்தால், பிரபாகரனும், புலிகளும் பிரேமதாசாவை நம்பி தங்கள் கொள்கைகளை கைவிட்டிருக்கவில்லை என்பதும், தேசிய விடுதலை இயக்கத்தை பேச்சு வார்த்தை மாயைகளில் சிக்காமல் தனியாக வைத்திருந்தனர் என்பதும் புரியும்.

இலங்கை அரசுடன் புலிகளும் பேச்சு நடத்தினார்கள்தானே? என்று தங்கள் சரணடைவு கொள்கைகளை நியாயப்படுத்த சில தமிழ்க் கட்சிகள் கேட்பதுண்டு.

புலிகள் அரசுடன் நடத்திய பேச்சையும் தமிழ்க் கட்சிகள் நேற்றும், இன்றும் அரசுடன் நடத்தும் பேச்சையும் ஒப்பிடுவது மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதற்கு ஒப்பானது.

## மாகாணசபைத் தேர்தல்

"வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தல் மீண்டும் நடத்தப்பட்டால் போட்டியிடுவீர்களா?" என்று திரு.அன்ரன் பாலசிங்கத்திடம் நிருபர்கள் கேள்வி எழுப்பினார்கள்.

மிகக் கவனமாக அக் கேள்விக்கு பதில் கூறினார் அன்ரன் பாலசிங்கம்: "மாகாண சபை அமைப்பை ஓர் இடைக்கால ஏற்பாடாக ஏற்றுக் கொண்டு தேர்தலில் பங்கு பற்றுவோம்.

தமிழீழ மக்களின் பூரண ஆதரவு விடுதலைப் புலிகளுக்கு இருக்கிறது. என்பதை நிரூபிக்க மாகாண சபை தேர்தலைப் பயன்படுத்துவோம்."

மேற்கண்டவாறு கூறிவிட்டு மேலும் ஒரு விடயத்தையும் திட்டவட்டமாகக் கூறினார் பாலசிங்கம்:

"இரண்டு நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால்தான் நாம் தேர்தலில் போட்டியிடுவோம்."

"என்ன நிபந்தனைகள்?" என்று நிருபர்கள் கேட்டனர். அதற்கு அன்ரன் பாலசிங்கம் சொன்ன பதிலில் புலிகளின் இராஜதந்திரம் அடங்கியிருந்தது.

"ஒன்று, இந்திய இராணுவம் முழுமையாக தமிழீழ மண்ணைவிட்டு வெளியேற்றப்பட வேண்டும். இரண்டாவது, மோசடித் தேர்தல் மூலம் இந்திய இராணுவத்தால் பதவியில் அமர்த்தப்பட்ட பொம்மை அரசான வடக்கு-கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட வேண்டும். அதன் பின்னர்தான் தேர்தலில் போட்டியிடுவோம்" என்றார் அன்ரன் பாலசிங்கம்.

இந்திய, இலங்கை அரசுகள் தங்கள் நலன்களுக்காக செய்த ஒப்பந்தத்தையும், அதன் விளைவான இந்தியப்படை, மாகாண சபை போன்றவற்றையும் இலங்கை அரசு மூலமே ஒரு வழி பண்ணுவதுதான் புலிகளின் இராஜதந்திரம்.

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான முரண்பாட்டை வைத்து இந்திய அரசு முன்பு காய் நகர்த்தியது.

அதே போலவே, இலங்கை, இந்திய அரசுகளுக்கிடையேயான முரண்பாட்டை வைத்து காய் நகர்த்தினர் புலிகள்.

தேர்தலில் போட்டியிடத் தயார் என்று அறிவித்ததும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியை அரசியல் கட்சியாகப் பதிவு செய்ததும்கூட ஒரு இராஜதந்திர நடவடிக்கைதான்.

பிரேமதாசா அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின்போது தாம் வெறுமனே இராணுவ அமைப்பல்ல, அரசியல் இராணுவ அமைப்பு என்பதை புலிகள் நிரூபித்தனர்.

## கட்டுப்பாடு

மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா போன்ற மாவட்டங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டன.

அங்கிருந்து இந்தியப் படையினர் வெளியேறி முடிக்க முன்னரே இந்தியப் படையுடன் இணைந்து நின்ற இயக்கங்கள் வெளியேறி விட்டன.

இந்தியப் படை வெளியேறியதும் அப்பகுதிகளில் நடமாடவும், ரோந்தில் ஈடுபடவும் முயன்ற இலங்கை அரசின் பொலிசாரும், இராணுவத்தினரும் புலிகளால் தடுக்கப்பட்டனர்.

இந்தியப் படை வெளி யேறிய இடத்தில் இலங்கைப் படையினரை நிறுத்தி வைக்க அனுமதிக்கக்கூடாது என்பது பிரபாகரனின் கண்டிப்பான உத்தரவு.

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகள் சீருடைகளுடனும், ஆயுதங்களுடனும் நடமாடினர். சில பகுதிகளில் புலிகளின் அனுமதி பெற்றுத்தான் பொலிசாரோ, படையினரோ தங்கள் முகாம்களை விட்டு வெளியே நடமாட முடிந்தது.

# ரஜினி படுகொலை சூத்திரதாரிகள் யார்?



மலர்வு: 23-02-1954 உதிர்வு: 21-09-1989

> "என்றாவது ஒருநாள் ஒரு துப்பாக்கி என்னை அமைதியாக்கிவிடும். ஆனால் அது வேற்று மனிதன் ஒருவனால் ஏந்தப்படுவதாக இருக்காது. மாறாக எனது வரலாற்றை பகிர்ந்து கொள்ளும் இச் சமூகத்தில் வாழும் ஒரு பெண்ணின் கருவறையில் இருந்து பிரசவிக்கப்பட்ட ஒரு. புத்திரனால் ஏந்தப்படும் துப்பாக்கியாகவே அது இருக்கும்!"

அம்பாறை, மட்டக்களப்பு, வவுனியா மாவட்டங்களில் நத்தார் பண்டிகைகள் நீண்ட காலத்தின் பின் 1989ல் கலகலப்பாக நடைபெற்றன.

இலங்கை இராணுவமும், பின்னர் இந்தியப் படையினரும் பட்டாசுகள் கொளுத்த கட்டுப்பாடுகள் விதித்திருந்தனர்.

இந்தியப் படையினர் வெளியேறியதால் சிறுவர்கள் பட்டாசுகள் கொளுத்த நத்தார் கொண்டாட்டங்கள் களைகட்டின.

## கலைஞருடன்

புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும், யோகியும் தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியைச் சந்திக்க தமிழகம் சென்றனர்.

அச் சந்திப்பின் பின்னர் கலைஞர் கருணாநிதி பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

"விடுதலைப் புலிகளுக்கு மக்கள் ஆதரவு இருக்கிறது. அவர்களது வீடியோ கசட் ஒன்றை பார்வையிட்டேன். அவர்கள் நடத்திய கூட்டம் ஒன்றில் பெருந்திரளான மக்கள் உற்சாகத்துடன் கலந்து கொண்டிருப்பதை கண்ணுற்றேன்" என்று கூறினார் கருணாநிதி.

"ஒன்றரை மணிநேரம் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தினேன்.

தமிழீழத்தில் நிலையான அமைதியை ஏற்படுத்தவும், தமிழீழ மக்களுக்கு நிரந்தரமான பாதுகாப்பும் நல்வாழ்வும் அமைவதற்கு வழி வகைகள் காணவேண்டும் என்ற அடிப்படையிலுமே பேச்சு நடந்தது" எனவும் கருணாநிதி கூறினார்.

அப்போது நிருபர் ஒருவர், புலிகளின் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுக்கள் உங்களுக்கு நம்பிக்கை தருகிறதா? என்று கேட்டார்.

உடனே கலைஞர் கருணாநிதி, "என்னைப் பார்த்தாலே அது உங்களுக்குப் புரியவில்லையா?" என்ற முகமலர்ச்சியுடன் பதில் கேள்வி தொடுத்தார்.

புலிகளின் பிரதிநிதிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுக்கள் பற்றி புதுடில்லி சென்று பிரதமர் வி.பி.சிங்குக்கு எடுத்துக் கூற உள்ளதாகவும் கருணாநிதி கூறியிருந்தார்.

## ரஜினி திரணகம

1989ம் ஆண்டின் இறுதியில் நடைபெற்ற படுகொலை நடவடிக்கை ஒன்று இன்றுவரை மர்மமாகவே உள்ளது.

**யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரையாளர் ரஜினி திரணகமவின் படுகொலையே அதுவாகும்.**

யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளரும், புலிகள் இயக்கத்தில் இருந்து பின்னர் விலகிக் கொண்டவருமான நிர்மலாவின் சகோதரிதான் ரஜினி திரணகம.

மனித உரிமை, பெண் விடுதலை என்பவற்றில் உண்மையான அக்கறை கொண்டவர்.. உயிருக்கு ஆபத்து நேரலாம் என்ற சூழலிலும் யாழ் பல்கலைக் கழகத்தை இயங்கவைப்பதற்காக முன்னின்று செயலாற்றியவர்.

இந்தியப் படையினரின் வருகையால் ஏற்பட்ட மனித உரிமை மீறல்கள், அவலங்கள் தொடர்பாக ரஜினி திரணகம கடும் கோபம் கொண்டிருந்தார்.

"நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை பக்கச் சார்பின்றி எடுத்துரைக்க வேண்டும். இந்த துன்பம் தோய்ந்த வரலாற்றை மக்கள் உணரச் செய்ய வேண்டும்" என்று ரஜினி விரும்பினார்.

யாழ் பல்கலைக்கழகத்தில் மனித உரிமைகளுக்கான ஆசிரியர்குழு என்ற பெயரில் ஒரு அமைப்பை உருவாக்கி, தங்கள் சமகால அழிவுகளை வெளிப்படுத்த முன்வந்தவர்களில் ரஜினியும் ஒருவர்.

மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்ப்பாணம்) என்ற பெயரில் மனித உரிமைமீறல்கள் பற்றிய அறிக்கைகள் வெளிவந்தன.

அதனை அடுத்து மிகப்பாரிய முயற்சி ஒன்றில் துணிச்சலுடன் இறங்கினார் ரஜினி திரணமக.

அதுதான் **'முறிந்த பனை'** என்னும் ஆவணத்தை உருவாக்கும் முயற்சி. அவரும் அநீதிகளுக்கு எதிரான துணிச்சலான பல்கலைக்கழக ஆசிரியர்களான ராஜன்றீல், தயா சோமசுந்தரம், கே. ஸ்ரீதரன் ஆகியோரும் இணைந்து அந்த ஆவணத்தை தயாரிக்கும் முயற்சியில் இறங்கினார்கள்.

மனித உரிமை, மனித கௌரவம் என்பவற்றுக்காக குரல் கொடுப்பது என்ற பெயரில் தங்கள் பெயர்களையும், முகங்களையும் பிரபலப்படுத்தும் ஒரு கூட்டம் எப்போதும் இருந்து வரும். இப்போதுகூட இருக்கிறது.

இவர்கள் மனித உரிமைக்கான போராட்டம் நடத்தினால் பத்திரிகையாளர்களுக்குத்தான் தொல்லை. தங்கள் பெயர்களோ, முகங்களோ செய்தியில், புகைப்படத்தில் வரவில்லையென்றால் ஒப்பாரி வைக்கத் தொடங்கிவிடுவார்கள்.

இவ்வாறான நபர்களில் சிலர் மனித உரிமை பற்றி பேசினால் தங்கள் உயிருக்கு ஆபத்து நேரும் என்று தெரிந்தால் நாட்டை விட்டே ஓடிவிடுவார்கள். பின்னர் சொகுசாக இருந்து, உல்லாசமாக மனித உரிமை பற்றி பேசக்கூடிய சூழல் தென்பட்டால் நாடு திரும்பி தம்பட்டம் அடித்துத்திரிவர்.

ஆனால் ரஜினி அப்படியானவரல்ல. அவர் ஒரு போராளி. கொலைகள் மிகச் சகஜமாக நடந்துவந்த ஒரு சூழலில் துணிந்து நின்று, தன் உயிரைப் பணயம் வைத்து மனித அவலங்களை வெளிக்கொண்டுவர பாடுபட்ட போராளி. பேசுவதைவிட செயலில் ஈடுபட ஆர்வம் உள்ளவர்.

## படையினர் கோபம்

'முறிந்த பனை' ஆவணத்தை தயாரிப்பதற்காக ரஜினியும் அவருடன் இணைந்து பல்கலைக்கழக ஆசிரியர்களும் பாதிக்கப்பட்ட பலரைச் சந்திக்க வேண்டி இருந்தது. இந்தியப்படை தன் மனித வேட்டையை நடத்திய பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று தகவல்கள் சேகரிக்கவேண்டி இருந்தது.

இத் தகவல்கள் இந்திய படையினருக்கு எட்டியது. தமது மனித உரிமை மீறல்கள் உலகின் முன் அம்பலமாகப் போகின்றனவே என்று அவர்கள் கிலேசமுற்றனர்.

மூன்று தடவைகள் ரஜினி திரணகமவின் வீட்டுக்குச் சென்ற இந்தியப் படையினர் சல்லடைபோட்டு ஆவணங்களைத் தேடினார்கள். எதுவும் கிடைக்க வில்லை.

மறைமுகமான எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டன. தன்னை யாரோ பின்தொடர்கிறார்கள் என்பது ரஜினிக்கும் தெரிந்தே இருந்தது.

விடுதலைப் புலிகள் பற்றியும் அவர்களது நடைமுறைகள் பற்றியும்கூட ரஜினியும், மனித உரிமைகளுக்கான பல்லைக்கழக ஆசிரியர்களும் விமர்ச்சித்திருந்தனர். புலிகளது தவறான நடவடிக்கைகளையும் அம்பலப்படுத்தி வந்தனர்.

ஆனாலும் அவர்களது பணி அக் காலகட்டத்தில் புலிகளைவிட இந்தியப் படைக்கும், அதனுடன் இணைந்து நின்ற இயக்கங்களுக்குமே பெரும் பாதகமாக அமைந்தன.

உலகின் மிகப் பெரிய இராணுவங்களில் ஒன்று இலங்கையில் இரத்தவெறியுடன் செயற்பட்டது. பாலியல் வல்லுறவுகளில் ஈடுபட்டது. யாழ் மருத்துவமனைக்குள் புகுந்து கொலை பாதகவேட்டை நடத்தியது போன்ற கொடூரங்கள் வெளியே அம்பலமாவது இந்தியப் படையினருக்கு என்றும் தீராத இழுக்கை ஏற்படுத்தக்கூடியதே.

அதுவும் சமூகத்தின் அங்கீகாரம் உள்ள பல்கலைக்கழக ஆசிரியர்கள் அவ்வாறான ஆவணத்தை வெளியிட்டால் அது நம்பகமான ஆவணமாகக் கருதப்படும் என்றும் அஞ்சினர்.

இவ்வாறான நிலையில்தான் ரஜினி திரணகமவைக் கொலை செய்யும் திட்டம் உருவானது.

இனிமேல் நான் இங்கு தரும் தகவல்கள் ரஜினி கொலை தொடர்பாக இதுவரை கூறப்பட்ட கருத்துக்கள், தகவல்கள் என்பவற்றுக்கு மாறாக இருக்கக்கூடும். ஆயினும் கிடைத்த தகவல்களை அப்படியே தருகிறேன்.

## இரகசியத் திட்டம்

ரஜினி திரணகமவை புலிகள் என்ற போர்வையில் கொலை செய்வது என்று இந்தியப் படைக்குள் ஒரு பிரிவினர் தீர்மானித்தனர்.

இக் கொலைத் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு கேர்ணல் சசிகுமார் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

கேர்ணல் சசிகுமார் உடனடியாக யாழ் மாவட்ட ஈ.பி.ஆர்.எல்.எஃப். தளபதியாக இருந்த ராபிக்குடன் தொடர்பு கொண்டார். ராபிக்கின் சொந்தப் பெயர் ரவீந்திரன். யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியில் வசித்தவர்.

இந்தியப் படை வெளியேறப்போகிறது என்பதும், தங்களால் நீண்ட காலத்திற்கு தாக்குப்பிடிக்க முடியாது என்பதும் ராபிக்குக்கு தெரியும்.

அதுமட்டுமல்லாமல் தன்னிச்சையாக கொள்ளை நடவடிக்கைகள் பலவற்றின் மூலமும் ராபிக் சொந்தமாக பணம் சேர்க்கத் தொடங்கியிருந்தார்.

தலைமையில் உள்ளவர்கள் இந்தியாவிடம் கிடைக்கும் பணத்தை சுருட்டுகிறார்கள். நாம் என்ன செய்வது, நாளை நடுத்தெருவிலா நிற்பது? என்பது ராபிக் தன் செயல்களுக்கு கூறிய நியாயம்.

பத்மநாபாவின் நம்பகமான ஆளாக இருந்த ராபிக், பத்மநாபாவுக்கும் தெரியாமல் சுருட்டலில் ஈடுபடத் தொடங்கினார். அதே போல நேரடியாக இந்தியப் படை, மற்றும் இந்தியப் படையின் உளவுப் பிரிவு என்பவற்றுடனும் தொடர்புகளை வைத்திருந்தார். தனிப்பட்ட உறவுகளாக இவை மாற்றமடைந்தன.

## நோட்டம் பார்த்தனர்

கேர்ணல் சசிகுமார் தொடர்புகொண்டு ரஜினி கொலை பற்றி கூறியதும் ராபிக் மறுபேச்சின்றி சம்மதித்தார். அப்போதெல்லாம் 'தட்டுதல்' என்பது சர்வசாதாரணம்.

ஏற்கனவே பொருளியல் ஆசிரியர் கிருஷ்ணானந்தன் உட்பட பல ஆசிரியர்களை கொலை செய்தவர்கள் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர். ராபிக்கின் பொறுப்பின் கீழ் தான் அக் கொலைகளும் நடத்தப்பட்டன.

எனவே, ரஜினி திரணகமவைக் கொலை செய்வது என்பதையும் சர்வ சாதாரணமாகவே எடுத்துக் கொண்டார் ராபிக்.

இவ்விடயம் தொடர்பாக பத்மநாபாவுக்கு தெரிவிக்கப்பட்டதா? இல்லையா? என்பதை உறுதி செய்ய முடியவில்லை.

ரஜினியை தீர்த்துக் கட்டுவதற்கான பொறுப்பை கார்த்திக், தோமஸ், ஆகிய இருவரிடம் ஒப்படைத்தார் ராபிக்.

இவர்கள் சில நாட்களாக ரஜினியின் நடமாட்டத்தை கண்காணித்து வந்தனர். பின்தொடர்ந்து திரிந்தனர்.

21.09.1989 அன்று யாழ் பல்கலைக் கழகத்திற்கு அண்மையில் உள்ள திருநெல்வேலிச் சந்தியில் வைத்து ரஜினியை சுட்டுக் கொன்றனர்.

தோமஸ் என்பவர்தான் ரஜினியை நோக்கிச் சுட்டார். படபடவென்று சுட்டுவிட்டு தப்பிச் சென்றுவிட்டனர்.

இரத்த வெள்ளத்தில் கிடந்தார் மனித உரிமைக்காக குரல் கொடுத்த துணிச்சலான போராளி ரஜினி.

இவ்விடயத்தை எக்காரணம் கொண்டும் வெளியே கூறக்கூடாது என்பது மேலிடக் கட்டளை என்று கொலையில் சம்பந்தப்பட்டவர்களை ராபிக் எச்சரித்தார்.

## கண்டனம்

கொலை பற்றிய செய்தி வந்ததும் வராததுமாக, 'புலிகளே கொலைக்கு காரணம்' என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப் அறிக்கை விட்டிருந்தது. கண்டனமும் தெரிவித்திருந்தது.

ரஜினி திரணகம திருநெல்வேலிச் சந்தியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டபோது, அந்த வேட்டோசைகள் கேட்ட சமயத்தில் புலிகள் இயக்க முக்கியஸ்தர் ஒருவரும் அவ்வழியே சென்றிருக்கிறார்.

தன்னை கண்டுவிட்டுத்தான் சுடுகிறார்கள் என்று நினைத்தே அவர் பதற்றமடைந்து படுவேகமாகச் சென்றிருக்கிறார்.

அவர் அப்படிச் சென்றதை சிலர் கண்டுள்ளனர். காகம் இருக்க பனம்பழம் விழுந்த கதையாக, கொலைப்பழி புலிகள் மீது விழ அதுவே காரணமானது.

இத் தகவல்கள் கொலையில் நேரடியாகப் பங்குகொண்ட கார்த்திக் மூலம் வெளியானது.

கார்த்திக், தோமஸ் ஆகியோர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தின் 'மண்டையன் குழு'வில் இருந்தவர்கள். ஈ.பி.ஆர்.எல்.எஃப். என்று வெளியே தெரியாமல் தமது விரோதிகளை படுகொலை செய்வதுதான் இக் குழுவின் வேலை. இக் குழு பற்றி முன்னரே விபரித்திருக்கிறேன்.

இந்தியப் படை வெளியேற்றத்தின் பின்னர் கார்த்திக், ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தில் இருந்து பிரிந்து ஈ.பி.டி.பி.யில் இணைந்து கொண்டார். தோமஸ் ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயலாளர் நாயகம் சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கு பாதுகாவலராக கொழும்பில் சில காலம் இருந்தார். தற்போது வெளிநாட்டில் இருக்கிறார்.

கார்த்திக், பின்னர் ஈ.பி.டி.பி.யை விட்டும் விலகினர். திருமலையில் தனிப்பட்ட தகராறு ஒன்றில் கார்த்திக் வெட்டிக் கொல்லப்பட்டார்.

ரஜினி திரணகம கொலைக்கு தாம் பொறுப்பல்ல என்று புலிகள் அப்போதே மறுத்திருந்தனர். ஆனால் இன்றுவரை புலிகள்தான் காரணம் என்றே கருதப்பட்டு வருகிறது.

இதற்கிடையே ரஜினி கொலையின் சூத்திரதாரியான கேர்ணல் சசிகுமார் அரியாலை மணியம் தோட்டம் பகுதியில் நடைபெற்ற மோதலில் புலிகளால் கொல்லப்பட்டார்.

தான் கொல்லப்படுவதற்கு சரியாக பதினாலு நாட்களுக்கு முன்பாக ரஜினி தன் நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு கூறியிருந்தார்:

*"என்றாவது ஒருநாள் ஒரு துப்பாக்கி என்னை அமைதியாக்கிவிடும். ஆனால் அது வேற்று மனிதன் ஒருவனால் ஏந்தப்படுவதாக இருக்காது. மாறாக எனது வரலாற்றை பகிர்ந்து கொள்ளும் இச் சமூகத்தில் வாழும் ஒரு பெண்ணின் கருவறையில் இருந்து பிரசவிக்கப்பட்ட ஒரு புத்திரனால் ஏந்தப்படும் துப்பாக்கியாகவே அது இருக்கும்!"*

**(தொடர்ந்து வரும்)**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்